# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு 1 வள்ளுவர் ஆண்டு 2031 ஆனி 22 வியாழக்கிழமை (06-07-2000) VALAMPURI ஒலி 199



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்


★ இனப்பிரச்சினை சமரசத்தீர்வுக்கு

# அரசு-புலிகள் கேட்டுக்கொண்டால் உதவுவதுபற்றி இந்தியா பரிசீலிக்கும்

## இந்தியப்பிரதமர் வாஜ்பாய் தெரிவிப்பு

(சென்னை)

**இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான சமாதானத் தீர்வு முயற்சியில் இந்தியா ஒருபோதும் மத்தியஸ்தம் வகிக்கமாட்டாது என்று இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளதாக பி.ரி.ஐ செய்தி ஒன்று தெரிவித்துள்ளது**

**இதேவேளை இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் கேட்டுக்கொண்டால் மட்டுமே இந்தியா சமாதானம் செய்து வைப்பது பற்றி பரிசீலிக்கும் என்று பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளதாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன**

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக சமரசத் தீர்வுக்கு இலங்கை அரசும், விடுதலைப்புலிகளும் இணைந்து கேட்டுக் கொண்டால் மட்டுமே சமாதானம் செய்துவைப்பதுபற்றி இந்தியா பரிசீலிக்கும் என்றுபிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

தமிழகம் வந்திருந்த இந்தியப் பிரதமர் வாஜ்பாய் நேற்று கோயம்புத்தூர் விமான நிலையத்தில் செய்தியாளர்கள் கேட்ட கேள்வி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பிரஜாவுரிமை கேட்கும் தகுதி இந்தியாவுக்குக் கிடையாது

### உறுமய கட்சி உறுமல்

(கொழும்பு)

இலங்கையில் உள்ள இந்திய வம்சாவழியினருக்கு பிரஜா உரிமை வழங்குமாறு இந்திய அரசுக்கு சட்ட ரீதியாகவோ தார்மீக ரீதியாகவோ கேட்பதற்கு எவ்வித உரிமையும் கிடையாதுஎன்று சிங்கள உறுமய கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சிங்கள உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் திலக்கருணாரட்ன அறிக்கை ஒன்றினை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டைப் பாதுகாக்க தப்பி ஓடிய இராணுவம் இணைய வேண்டும்

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் மீண்டும் திரும்பிவந்து தமக்கு அளிக்கப்பட்ட பயிற்சியைப் பயன்படுத்தி இக்கட்டான நிலையிலிருந்து நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்று பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த வேண்டுகோள விடுத்துள்ளார்.

இலங்கை இராணுவத்திலிருந்து சுமார் 20,000பேர் இவ்வாறு தப்பி ஓடியிருக்கின்றார்கள் என்றும் இவர்கள் ஒவ்வொருவரினதும் மூன்றரை மாத காலப்பயிற்சிக்கு தலா 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை அரசாங்கம் செலவிட்டுள்ளது இதனால் தப்பி ஓடிய இராணுவத்தினர் தமது பொறுப்பை உணர்ந்து திரும்பவும் இராணுவத்தில சேர வேண்டும் என்றும் அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்:

(வ-4)

## பொதுத் தேர்தலுக்கு சுதந்திரக் கட்சி தயாராகிறது

(கொழும்பு)

விரைவில் பொதுத் தேர்தல் நடைபெறவிருப்பதால் அத்தேர்தலுக்கு இப்பொழுது இருந்தே தயாராகுமாறு ஜனாதிபதி சந்திரிகா சுதந்திரக்கட்சி அமைப்பாளர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழுக்கூட்டத்திலேயே ஜனாதிபதி இவ்வாறு கேட்டுள்ளார்.

பொதுத்தேர்தல் தொடர்பாக கட்சி அமைப்பாளர்களை ஜனாதிபதி விரைவில் சந்தித்துப் பேசவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## கரும்புலிகள் தினம் அனுஷ்டிக்கப்பட்டது

(வவுனியா)

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் கரும்புலிகள் தினம் எழுச்சி பூர்வமாக கொண்டாடப்பட்டதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நுகேகொட நீதிமன்றில் நேற்று குண்டு வெடிப்பு

### ஒருவர் பலி, 13 பேர் காயம்

(கொழும்பு)

நுகேகொட, கங்கொடவில நீதிவான் நீதமன்றத்தில நேற்று இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஒருவர் பலியானர் 13பேர் காயமடைந்துள்ளனர் .18சந்தேக நபர்கள் தப்பியோடியுள்ளனர்.

பலியான அசோகா உபநிதபெரேரா என்பவர் வெலிகந்தவில் இடம்பெற்ற 6பேர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தின் பிரதான சந்தேகநபராவார் இக்குண்டு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மாயமாக வந்த துப்பாக்கி ரவை இளைஞனின் தலையைத் துளைத்தது

(யாழ்ப்பாணம்)

"மாபிள் அடித்து விளையாடிக் கொண்டிருந்த இளைஞன் ஒருவன் எங்கிருந்தோ வந்த துப்பாக்கிக்குண்டினால் தலையில் காயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ்; போதனா வைத்தியசாலை அதிதீவிர சத்திர சிகிச்சைப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் நகரில் நேற்று திடீர் சோதனை

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு நேற்று யாழ். நகரப்பகுதி இராணுவத்தினரின் திடீர் சோதனைக்குட்படுத்தப்பட்டிருந்தது:

நேற்று நண்பகல் வாகனங்களில் வந்த இராணுவத்தினர் நகரின் முக்கிய சந்திகள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று தபால் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 16 பொதிகள் செஞ்சிலுவைக் கப்பல் மூலம் நேற்று எடுத்துவரப்பட்டுள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பின்கதவால் பெற்றோல் விற்பனை கையும் மெய்யுமாகப் பிடிபட்டது

யாழ். நகரின் பிரதான வீதியில் உள்ள தனியார் எரிபொருள் விற்பனை நிலையம் ஒன்றில் பின்புறமாக வைத்து பெற்றோல் கானில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தப்பியோடிய 25,000 படையினரை தேடி பொலிஸார் வலைவீச்சு

(கொழும்பு)

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடி தலைமறைவாகவுள்ள சுமார் 25ஆயிரம் இராணுவத்தினரையும் கைது செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பாதுகாப்பு அமைச்சு பொது மக்களிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

தப்பி ஓடிய இராணுவத்தினரைத் தேடிக் கண்டுபிடிப்பதில் ஈடுபட்டிருக்கும் பொலிஸார் கலகாப் பகுதிகளில் 18 ராணுவத்தினரைக் கைது செய்துள்ளனர். (வ)

★ செம்மணிப் புதைகுழி வழக்கு

## கொழும்பு நீதிவான் நீதிமன்றிற்கு சேவைகள் அனுப்பி வைப்பு!

(யாழ்ப்பாணம்)

செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணை இனிமேல் கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது.

இந்த வழக்கு விசாரணை யாழ்ப்பாண நீதிமன்றத்தில் இது வரை நடைபெற்றது. வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட சந்தேகநபர்களான 5 படையினரையும் வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து யாழ். நீதிமன்றிற்கு கொண்டுவருவதில் ஏற்பட்டுள்ள போக்குவரத்துப்பிரச்சினையால் இவர்களை கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு யாழ்ப்பாண நீதிவான் ஏற்கனவே உத்தரவிட்டிருந்தார்.

இதன்படி அவர்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மறைந்த மாயமென்ன; நிலைமாறி 'மா' தாராளமாக விநியோகம்

## ஆனால் விலைக்குறைப்பு உதாசீனம்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிச் சூழ்நிலையையடுத்து எங்கோ மறைந்து கொண்ட மறைக்கப்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களில் ஒன்றான மா இப்போது மெது, மெதுவாகப் புழக்கத்துக்கு வந்து கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மா இருக்கிறதா ..னக்கேட்டால் இல்லை எனக்கைவிரிக்கும் நிலைமாறி மாவா தாராளமாக உள்ளதேஎன கூட்டுறவுச் சங்கங்கள் பலகூட இப்போதெல்லாம் தாராளம் காட்டுகின்றனவாம்.

மாவின் விலை மூன்று ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதையடுத்து இத்தாராளப் போக்கைக் காணமுடிகிறதென்றும் அதேவேளை அரசாங்கம் அறிவித்துள்ள விலைக்குறைப்பை உதாசீனம் செய்யும் வகையில் முன்னைய விலைக்கே இச்சங்கங்கள் மாவை பங்கீட்டு அட்டைக்கு விற்பனைசெய்து வருகின்றமை சுட்டிக்காட்டப்படவேண்டிய ஒன்று என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-சி)


## சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

லைற் எஞ்சின்.5கோஸ்பவர்(பெற்றர்) இங்லன்ட் 3கிலோடைனமோ,இங்லன்ட் றேடியற்றர்கூலர்.( இழுவை வண்டியுடன் பொருத்தப்பட்டது)க கந்தசாமி,ஆடியபாதம் வீதி,நல்லூர், யாழ்ப்பாணம். (1479)


### வேலையற்ற பட்டதாரிகள்

## சங்க தலைவர்-வட.கிழ.ஆளுநர் விரைவில் சந்திக்க ஏற்பாடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் மாணவர் ஒன்றிய தலைவர்களைச் சந்தித்து, அவர்களுடைய பிரச்சினைகள் தொடர்பாக நேரில் கலந்துரையாட வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் அசோகா ஜெயவர்த்தனா விருப்பம் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூன் மாதம் 25 ஆம் திகதி தொட்டு 28 ஆம் திகதிவரை மேற்படி வேலையற்ற பட்டதாரிமாணவர்கள் சுழற்சி முறையிலான உண்ணாவிரத்தினை மேற்கொண்டமையையும், இவர்களுக்குவேலை வாய்ப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஆளுநரிடம் வலியுறுத்தியதை அடுத்தே மேற்படி சந்திப்புக்கான உடன்பாடு எட்டப்பட்டிருப்பதாக தெரிய வந்துள்ளது.

இம்மாதம் 10 ஆம் திகதி மாகாண ஆளுநர் பணிமனையில் இடம்பெறவுள்ளமேற்படி சந்திப்பின் போது, மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் வேலையற்ற பட்ட தாரிகள் சங்கஉறுப்பினர் மூவர் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ)

## 500 பேர் கொண்ட இளைஞர் படையை அமைக்க ஐ.தே.க முயற்சி

தேர்தல் தொகுதிகள் தோறும் 500 பேர் கொண்ட இளைஞர் படைகளை அமைக்கஐக்கிய தேசியக்கட்சி திட்டமிட்டுள்ளது.

விரைவில் நடைபெறவுள்ள பாராளுமன்ற பொதுத் தேர்தலையொட்டி தேர்தல் தொகுதிகள் தோறும் மேற்படி இளைஞர் படைகளை அமைக்கும் பணியை ஐக்கிய தேசியக் கட்சிசெயற்படுத்தவுள்ளது.

அண்மையில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்திில்மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (உ)

## கண்டியில் தமிழ் இளைஞன் கைது 'வெடிபொருள் வைத்திருந்தாராம்'

கண்டி ரந்தெல்லை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட தோட்டப்பகுதி ஒன்றிலிருந்து கடந்த திங்கட்கிழமை, ஆயுதம் மற்றும் வெடிப்பொருட்களுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

20 வயதுடைய உதயகுமார் என்ற இளைஞரே கைதுசெய்யப்பட்டவராவார்.

இவரிடமிருந்து இரண்டு கைக்குண்டுகள், வெடிமருந்துகள், ஆயுதங்கள் என்பவற்றை கைப்பற்றியிருப்பதாக ரந்தெல்ல பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ)

## உடுவில் கிழக்கில் ஊரடங்கு வேளையிலும் திருடர் நடமாட்டம்

உடுவில் கிழக்கு பகுதியில் திருடர்கள் ஊரடங்கு வேளையிலும் தமது இழிசெயலை நடத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாயன்மார்கட்டுப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து இப்பகுதியில் தங்கியுள்ள குடும்பம் ஒன்றின் உடைமைகளையும் பணத்தையும் இவர்கள் திருடிச் சென்ற சம்பவம் ஒன்றும் அண்மையில் இடம் பெற்றுள்ளது.

மாணவர்களது உடைகளும் திருடப்பட்டுள்ளன. (சி-49)

## மானிப்பாயில் மர்மவெடிச்சம்பவம் நீதிபதி நேரில் சென்று விசாரணை

[யாழ்ப்பாணம்]

மானிப்பாயில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மர்மப் பொருள் வெடிப்பு சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் பாலசிங்கம் நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

இதுவிடயம் தொடர்பான விசாரணைகளை துரித கதியில் மேற்கொண்டு விரைவில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு சுன்னாகம் பொலிசாருக்கு அவர் அவசர உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதே வேளையில் இருநகர் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலய மாணவன் ஜேசுராஜா மகிஸ்ரன் மர்மப்பொருள் வெடித்ததில் உயிரிழந்ததும் இதுபோன்ற ஓர் சம்பவம் பருத்தித்துறையில் இடம்பெற்றதும் ஏற்கனவே தெரிந்தவையே. (க - 12)


## 'ராஜா'

யாழ்ப்பாணம்

03-07-2000

முதல் குதூகல ஆரம்பம்

ரஜனிகாந்த், சௌந்தர்யா, ஜெய்சங்கர்.கபாலி. மனோரம்மா, ரகுவரன் நடித்த

அருணாச்சலம்

புதிய நேரம்:10.30, 2.00

[இ/555]



## நாகம்ஸ்

சுன்னாகம்

4வது வாரத்தைநோக்கி கார்த்திக், ரோஜா, அஜித் நடித்த

உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்

(தினம்)

11.00, 2.30 [பு:நே]

(இ/462)


## பலத்த சிரமத்தின் மத்தியில் நாகர் கோவிலில் தேடுதல் பணி

### படை வட்டாரங்கள் தெரிவிப்பு

[கொழும்பு]

நாகர்கோவிலில் தொடர்ந்து தேடுதல் நடவடிக்கை முடுக்கிவிடப்பட்டுள்ளதாகபடைத்தரப்பை ஆதாரம் காட்டி விசேட தகவல் நிலையம் நேற்று தெரிவித்தது.

இத்தேடுதலின் போது விடுதலைப்புலிகளுடையது எனக் கருதப்படும் 23சடலங்கள் மட்டுமே தம்மால் மீட்க முடிந்ததாகவும்தேடுதல்பணி பலத்த சிரமத்தின் மத்தியிலேயே மேற்கொள்ளபடுவதாகவும் தகவல் நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து தொடர் மோட்டார் தாக்குதல் நடத்தப்பட்டு வருவதாகவும் படைத்தரப்பு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளையில் நாகர் கோவில் பகுதியில் அரச படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் ஆரம்பித்திருப்பது ஏற்கனவே தெரிந்ததே. [க]

## தொண்டர் ஆசிரியர் கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

தொண்டர் ஆசிரியர் சங்கத்தில் பதிவு செய்து, நேர்முகப்பரீட்சைக்கு தோற்றி இதுவரை நியமனம் பெறாத தொண்டர் ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை 7 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள டி. எம். ஐ. கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது. [க]

## நாட்டில் சமாதானம் வேண்டி சப்ரகமுவவிலிருந்து மடுவிற்கு யாத்திரை

(கொழும்பு)

சப்பிரகமுவ மாகாணத்தில் இருந்து 650 பேர் கொண்ட யாத்திரிகர் குழு, இலங்கையில் சமாதானம் மலர வேண்டி மடுமாதா ஆலயத்திற்கு இன்று புனித யாத்திரையை மேற்கொள்கின்றது.

இரத்தினபுரி ஆயர் ரஞ்சித் ஆண்டகை தலைமை தாங்கிச் செல்லும் இப்புனித யாத்திரையில் தமிழர்களும், சிங்களவரும் இனபேதம் மறந்து கலந்துகொள்வது குறிப்பிடத்தக்கது.

யுத்தத்தில் ஈடுபட்டிருப்போர் மனதில் மாற்றம் ஏற்பட்டு போரைக் கைவிட்டு பேச்சுவார்த்தைக்குத் திரும்ப வேண்டும் என்னும் கோரிக்கையை முன்வைத்து இப் புனிதயாத்திரை மேற்கொள்ளப்படுகிறது.

யாத்திரிகர் குழு நாளை மடுமாதா கோயிலைச் சென்றடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (க-உ)

## நகரில் சோதனை நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

கரும்புலிகள் தினத்தையொட்டி நேற்று யாழ்நகரப் பகுதியில் படையினரின் சோதனை நடவடிக்கைகள் பரவலாக இருந்தன.

தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன நுணுக்கமாகப் பரிசீலிக்கப்பட்டன. (ர)

## பணமோசடியில் ஈடுபட்ட சீன விவசாயப் பெண்ணுக்கு மரணதண்டனை

(பீக்கிங்)

கிழக்கு சீனாவில் கிராம மக்களிடம் இருந்து சுமார் 12 இலட்சம் அமெரிக்க டொலரை மோசடி செய்த விவசாயப் பெண்ணுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

97விவசாயிகளை ஏமாற்றி அவர்களிடமிருந்த ஓய்வூதிய சேமிப்புப் பணத்தினை பெற்றதாகவும் 10வீத வட்டியுடன் திருப்பித் தருவதாக கூறிய காலக்கெடு முடிவடைந்த நிலையிலும் பணத்தை உரியவர்களிடம் கொடுக்கத் தவறியதையும் அடுத்தே மேற்படி தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகத்தெரிய வருகிறது. [உ]

## இன்றுதேர்

(அச்சுவேலி)

ஆவரங்கால்சிவன் கோயில் வருடாந்த மகோற்சவத்தின் இரதோற்சவம் இன்று (06. 07. 2000) வியாழக்கிழமை காலை இடம்பெறும்.

தீர்த்தோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை காலை நிகழும். (இ-14)

★

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை ஸ்ரீ வீரபத்திரர் சிவன் ஆலய ரதோற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கும், மறுநாள் ஆனி உத்தரத்தன்று நடேசர் அபிஷேகமும், நண்பகல் 12 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். சனிக்கிழமை மாலை பூங்காவனத் திருவிழா நிகழும்.

வட்டுக்கோட்டை தெக்கணப்பாடப் ஸ்ரீ கண்ணகாம்பிகாசமேத கண்ணகேஸ்வர சுவாமி தேவஸ்தான ரதோற்சவம் இன்று நடைபெறுகிறது. (சி)

## தமிழ் குழுக்களிடம் வேண்டுகோள்

(வவுனியாவில்)

வவுனியாவில் இயங்கும் தமிழ்க்குழுக்கள்,பிரதான வீதிகளில் புதிதாக காப்பரண்கள் மற்றும் முகாம்களை அமைக்கும் போது இராணுவத்திடம் முன் அனுமதிபெற வேண்டும் என வவுனியா மாவட்ட இணைப்பாளர் பிரிகேடியர் திஸ்ஸஜெயவர்த்தன வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ)

## பாடசாலை அதிபர் வேண்டுகோள்

(புலோலி)

மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில்க.பொ.த[சாதாரண]தரம்,மற்றும்தரம்05மாணவர்களில் தற்பொழுதுவலிகாமம் பிரிவில் தங்கியிருப்போர் 7ஆம்திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00மணிக்கும் பி.பகல் 3.00மணிக்கும் இடையில் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் சந்திக்குமாறு மேற்படி பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

வடமராட்சியில் தங்கியிருப்போர் 8ஆம் திகதி சனிக்கிழமை மு.பகல்9.00இற்கும். 10.00மணிக்கும் இடையில் தம்மை சந்திக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். [க-52]

## கண்டெடுக்கப்பட்டது

(இணுவில்)

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோயில் தேர்திருவிழாவன்று தவறவிடப்பட்ட சைச்சங்கிலி ஒன்று இணுவில் பொது நூலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (சி-49)

## வரவேற்பு நிகழ்வு

(புலோலி)

செம்பியன்பற்று புனித பிலிப்நேரியார் ஆலய பங்குத்தந்தை அருட்திரு நிகலவன் டொறெக்ஸ் அடிகளார் பருத்தித்துறை தும்பளை புனித மரியன்னை ஆலயத்தில் எதிர் வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை செம்பியன்பற்று தும்பளை பங்கு மக்களால் வரவேற்கப்படவுள்ளார்.

திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படுகின்றது. இல்லாலை பங்குத்தந்தையர்களான அருட்திரு ஜோதிநாதன் அடிகளார், அருட்திரு அன்ரன் அமலதாஸ் அடிகளார், மிருசுவில் பங்குத்தந்தை அருட்திரு. ஞானேந்திரன் அடிகளார் ஆகியோரும் வரவேற்கப்படவுள்ளனர் (க-52)

# மிதவாதப் போக்கில் அரசு நாட்டம்?

# ஜெயக்கொடி விஜயம் குறித்துகருத்து

[கொழும்பு]

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயகா குமாரதுங்காவின் விசேட தூதுவராக பௌத்த சாசன கலாசார அலுவல்கள் அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி புதுடில்லிக்கு பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங் முதலானோரைச் சந்திக்க அனுப்பப்பட்டிருப்பது அரசியல் நோக்கர்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் ஜெயக்கொடி பழுத்த அரசியல்வாதி, அரசியலில் என்றுமே மிதவாதப் போக்கைக் கடைப்பிடிப்பவர் அத்துடன் பண்டாரநாயகா குடும்பத்துடன் மிகநெருங்கிய நட்பினைக் கொண்டிருப்பவர் குறிப்பாக பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவுக்குப் பின் அப்பதவிக்கு நியமிக்கப்பட இருப்பவர் என பரவலாக இன்னமும் நம்பிக்கையுடன் பேசப்படுபவர்.

இந்த வகையில் இம்முறை வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூட அனுப்பப்படாமல் இவர் தற்போது இந்திய அதி உயர் தலைவர்களுடன் இனப்பிரச்சினை விடயம் சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்த ஜனாதிபதியால் அனுப்பப்பட்டுள்ளமை இவ்விடயத்தில் மிதவாதப் போக்கு சமாதானம் பிடிக்கப்பட்டு சமாதானம் ஏற்படுவதற்கான சூழ்நிலை வலுப்பட காமைநிந்த ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதனைத் துலாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றது என்று அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள் என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் ஜெயக்கொடி இந்தியாவில் மூன்று நாட்கள் தங்கியிருப்பார் உன்பது குறிப்பிடத்தழகது. [ஸ்ரீ]

## யாழ். வலய பாடசாலைகள் சிலவற்றில் அதிபர் பதவி வெற்றிடம்

### விண்ணப்பிக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். வலயத்திற்குட்பட்ட கீழ் குறிப்பிடப்படும் பாடசாலைகளுக்கு அதிபர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் உள்ளதால் இவ்வலயத்தில் பணிபுரியும் இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 2 தரம்1 வகுப்பு 1 என்பவற்றைச் சேர்ந்த அதிபராகப் பணி புரியாதவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம், தோப்பு அருள் நந்தி வித்தியாலயம், கதிரிப்பாய் சுப்பிரமணியம் வித்தியாலயம், நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலை, ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.

மேற்படி விண்ணப்பங்கள் யாவும் இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செல்வராணி மகாலிங்கம் தெரிவித்துள்ளார் (சி)

## கொள்வனவான நவீன யுத்த ஆயுதங்கள் யாழ். படையினரின் பாவனையில்

(கொழும்பு)

இலங்கை அரசினால் கொள்வனவு செய்யப்பட்ட நவீன ஆயுதங்கள் தற்போது யாழ். யுத்த முனையில் இராணுவத்தினரால் பாவிக்கப்பட்டு வருவதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடபகுதிக்குப் பொறுப்பான இராவணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா கருத்து வெளியிடுகையில், யுத்தம் நடைபெறும் பகுதிகளுக்கு தளபதிகள் சென்று யுத்த நிலைமையை அவதானித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்; (வ)

## 87 பாலர் பாடசாலைகள் யாழில் இயங்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த [பாலர் பாடசாலைகளில் 87 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பாடசாலைகள் உள்ளூராட்சி சபைகளின் கீழ் இயங்கிவருவதால் இது தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 565 பாலர் பாடசாலைகளில் 12 ஆயிரத்து அறுநூற்று 82 பிள்ளைகளுக்கு 808 ஆசிரியர்கள் கல்வி கற்பித்தனர்.

பச்சிலைப்பள்ளி, சாவகச்சேரி ஆகிய பிரதேசசபைகள் தற்போதைய யுத்த நிலைமையால் இடம்பெயர்ந்துள்ளதால் அங்கிருந்த பாலர் பாடசாலைகளும் வேறு சில பிரதேசசபைகளும் சேர்ந்த பாடசாலைகளுமாகவே 87 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. [ச-வ]

## வவுனியா ஆதார வைத்தியசாலை தேசிய வைத்தியசாலையாக தரமுயர்வு?

(வவுனியா)

வவுனியாவிலுள்ள ஆதார வைத்தியசாலை தேசிய வைத்தியசாலையாக தரம் உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

வவுனியா ஆதார வைத்தியசாலையை தேசிய வைத்தியசாலையாக மாற்றுவதற்கான திட்டம் ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா வகுத்துள்ளார்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதி பணிக்குழு நேற்று நேரில் சென்று ஆராய்ந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (வ)

## புத்தூர்ச் சிவனே புதுமை தாரும்

உன் நெற்றிக் கண்ணிலேனும் படுவதற்காய்...
உமது தலம் வந்து சேர்ந்தோம்-ஏதிலியாய்
உன்னடியிலும் வந்து வீழ்ந்தோம்-பக்தர்களாய்
உன்தேர் வரும் வீதிதனில் மாண்டோம்-பத்தினியாய்

புத்தாயிரமாமாண்டில் புதுவலம் வரும்-எம்
புதுவைச் சிவனே இனியாவது புதுமை தாரும்
புதிதாய் தாரும்-இன்று வேண்டுவார்க்கு
புகலிடமும் தாரும் புத்தூர்ச் சிவனே.

[புத்தூர் ஸ்ரீ விசாலாட்சி அம்பிகா சமேத விஸ்வ நாதசுவாமி தேவஸ்தான (புத்தூர்ச் சிவன்) தேர் உற்சவம் இன்றாகும்].

— தரன் —

(தேர் - 06.07.2000)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

(தென்மராட்சி)

யாழ். மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசத்தின் வருடாந்த பொதுச் சபைக்கூட்டம் இம் மாதம் 15ம் திகதி யாழ். கோவில் வீதியிலுள்ள சமாசத்தின் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

சமாசத்தின் தலைவர் திரு. சி. வி. கந்தையா சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் நாற்பதுக்கும் மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் பங்குபற்றுவார்கள் எனத் தெரியவருகின்றது. (சி-77)

## சண்டிலிப்பாய் பிரிவில் 1050 குடும்பங்கள்

(இணுவில்)

தென்மராட்சியிலிருந்து இடம் பெயர்ந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 1050 குடும்பங்கள் தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்குடும்பங்கள் முகாம்கள் உறவினர் வீடுகள் மற்றும் வெறுமையாக உள்ள காணிகளில் தங்கியுள்ளனர் என்றும் இக்குடும்பங்கள் பற்றிய விவரங்களைப் பதியும் பணியை பிரதேசசபை மேற்கொண்டுள்ளது என்றும் மேலும் அறியவந்துள்ளது.

(சி-49)

## திருட்டுக்கள் அதிகரிப்பு

(தென்மராட்சி)

வடமராட்சியிலுள்ளவல்லிபுரம் கிராம சேவையாளர் பிரிவில் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள வேளைகளில் பல திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவங்கள் குறித்து இப்பகுதி மக்கள் கிராம சேவையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

தென்மராட்சிப்பிரிவில் இருந்து இடம்பெயர்ந்து இப்பகுதியில் தஞ்சம் அடைந்துள்ள குடும்பங்கள் இப்பகுதியில் இடம் பெறும் திருட்டுச் சம்பவங்கள் குறித்து அச்சம் கொண்டுள்ளதாகவும் அறிய வந்துள்ளது. (இ-77

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஜூன் மாதம் 26, 28 ஆம் திகதிகளில் யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவிலக்கங்களின் நேற்றைய தொடர்ச்சி

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 141980 ஏ | 143748 ஏ |
| 143748 பி | 143776 ஏ |
| 143777 ஏ | 143777 பி |
| 143786 ஏ | 143786 பி |
| 144192 ஏ | 144231 ஏ |
| 144231 பி | 144231 சி |
| 147107 ஏ | 147107 பி |
| 147221 ஏ | 147230 ஏ |
| 147230 பி | 147254 ஏ |
| 147284 ஏ | 147284 பி |
| 147300 ஏ | 147300 பி |
| 147300 சி | 147335 ஏ |
| 147406 ஏ | 147406 பி |
| 148315 ஏ | 148315 பி |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 135483 ஏ | 144103 ஏ |
| 144103 பி | 144128 ஏ |
| 144128 பி | 147248 ஏ |
| 147248 பி | 147248 சி |
| 147251 ஏ | 147251 பி |
| 147256 ஏ | 147257 ஏ |
| 147386 ஏ | 147386 பி |

### உடுவில்

| | |
|---|---|
| 145131 ஏ | 145131 பி |
| 147678 ஏ | 147679 ஏ |
| 138523 ஏ | 138523 பி |
| 138523 சி | 144218 ஏ |
| 144218 பி | 144223 ஏ |
| 144223 பி | 144235 ஏ |
| 144244 ஏ | 146952 ஏ |
| 146952 பி | 147104 ஏ |
| 147184 ஏ | 147184 பி |
| 147270 ஏ | 147270 பி |
| 147271 ஏ | 147276 ஏ |
| 147277 ஏ | 147277 பி |
| 147277 சி | 147287 ஏ |
| 147287 பி | 147288 ஏ |
| 147297 ஏ | 147297 பி |
| 147297 சி | 147297 டி |
| 147297 ஈ | 147317 ஏ |
| 147318 ஏ | 147332 ஏ |
| 147333 ஏ | 147333 பி |
| 147333 சி | 147333 டி |
| 147333 ஈ | 147337 ஏ |
| 147352 ஏ | 147355 ஏ |
| 147355 பி | 147363 ஏ |
| 147363 பி | 147396 ஏ |
| 147396 பி | 147396 சி |
| 147397 ஏ | 136327 ஏ |
| 136327 பி | 136327 சி |
| 136327 சி | 136327 ஈ |
| 136363 ஏ | 136363 பி |
| 145140 ஏ | 145145 ஏ |
| 147667 ஏ | |

### வேலணை

| | |
|---|---|
| 12733 ஏ | 13238 ஏ |
| 13262 ஏ | 18262 பி |
| 13269 ஏ | 13272 ஏ |
| 13294 ஏ | 13295 ஏ |
| 13301 ஏ | 13316 ஏ |
| 13316 பி | 13318 ஏ |
| 13327 ஏ | 13327 பி |
| 13329 ஏ | 13329 பி |
| 13329 சி | 13329 டி |
| 13329 ஈ | 13329 எவ் |
| 13329 ஜி | 13332 ஏ |
| 13332 பி | 13344 ஏ |
| 13353 ஏ | 13354 ஏ |
| 13357 ஏ | 13357 பி |
| 13357 சி | 13359 ஏ |

ஜூன் 29, ஜூலை 1 ஆம் திகதிகளில் யாழ் குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்கு செல்ல பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்,

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 140918 ஏ | 144785 ஏ |
| 145550 ஏ | 145582 ஏ |

### சங்கானை

| | |
|---|---|
| 130763 ஏ | 130763 பி |
| 130763 சி | 130763 டி |
| 130763 ஈ | 130763 எவ் |
| 130763 ஜி | 141777 ஏ |
| 141778 ஏ | 143744 ஏ |
| 143744 பி | 143772 ஏ |
| 143772 பி | 143774 ஏ |
| 144040 ஏ | 144049 ஏ |
| 144050 ஏ | 144051 ஏ |
| 144051 பி | 144079 ஏ |
| 144091 ஏ | 144091 பி |
| 144091 சி | 144105 ஏ |
| 144119 ஏ | 144142 ஏ |
| 144234 ஏ | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 143330 ஏ | 143330 பி |
| 143339 ஏ | 143339 பி |
| 143354 ஏ | 143354 பி |
| 143371 ஏ | 143372 ஏ |
| 143376 ஏ | 143376 பி |
| 143376 சி | 143376 டி |
| 143376 ஈ | 143376 எவ் |
| 143446 ஏ | 144244 ஏ |
| 144244 பி | 148946 ஏ |
| 148946 பி | 148976 ஏ |
| 148995 ஏ | 148995 பி |
| 149144 ஏ | 149144 பி |
| 143257 ஏ | 145135 ஏ |
| 145135 பி | 149127 ஏ |
| 149127 பி | 149127 [illegible] |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 129207 ஏ | 141685 ஏ |
| 141685 பி | 141695 ஏ |
| 141898 ஏ | 143780 ஏ |
| 143780 பி | 143910 ஏ |
| 143920 ஏ | 143920 பி |
| 144030 ஏ | 144035 ஏ |
| 144048 ஏ | 144048 பி |
| 144048 சி | 144154 ஏ |
| 144154 பி | 147320 ஏ |
| 147320 பி | 147320 சி |
| 147320 டி | 147346 ஏ |
| 147346 பி | 147346 சி |
| 148239 ஏ | 148247 ஏ |
| 148248 ஏ | 148249 ஏ |
| 148250 ஏ | 148250 பி |
| 148250 சி | 148251 ஏ |
| 148251 பி | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 146971 ஏ | |

### உடுவில்

| | |
|---|---|
| 136388 ஏ | 136388 ஒ |
| 136388 சி | 145185 ஏ |
| 145185 பி | 145185 |
| 141263 ஏ | 141798 ஏ |
| 141798 பி | 143762 ஏ |
| 143768 ஏ | 143940 ஏ |
| 144007 ஏ | 144007 பி |
| 144007 சி | 144010 ஏ |
| 144112 ஏ | 144186 ஏ |
| 144186 பி | 144186 சி |
| 147051 ஏ | 147051 எவ் |
| 145144 ஏ | 145144 பி |
| 145144 சி | 145144 டி |
| 145146 ஏ | 145147 ஏ |
| 147659 ஏ | 147659 பி |
| 147659 சி | 147670 ஏ |
| 147670 பி | 147670 சி |
| 147670 டி | |

### நல்லூர்

| | |
|---|---|
| 141132 ஏ | 144761 ஏ |
| 144798 ஏ | 144799 ஏ |
| 145004 ஏ | 145053 ஏ |
| 145530 ஏ | 145531 ஏ |
| 145578 ஏ | 145641 ஏ |
| 131781 ஏ | 131781 பி |
| 143766 ஏ | 143936 ஏ |
| 144060 ஏ | 144060 பி |
| 144064 ஏ | 144064 பி |
| 144081 ஏ | 144169 ஏ |
| 144169 பி | 144169 சி |
| 144187 ஏ | 144187 பி |
| 144187 சி | 144201 ஏ |
| 144201 பி | 144210 ஏ |
| 144210 பி | 146958 ஏ |
| 146958 பி | 146958 சி |
| 146958 டி | 147239 ஏ |
| 147239 பி | 147239 சி |
| 147239 டி | 147390 ஏ |
| 147390 பி | 136164 ஏ |
| 136829 ஏ | 140905 ஏ |
| 140937 ஏ | 140978 ஏ |
| 140990 ஏ | 140994 ஏ |
| 140995 ஏ | 141000 ஏ |
| 141006 ஏ | 141070 ஏ |
| 141071 ஏ | 141072 ஏ |
| 141073 ஏ | 141094 ஏ |
| 141136 ஏ | 143228 ஏ |
| 143228 பி | 143228 சி |
| 143228 டி | 144742 ஏ |
| 144755 ஏ | 144760 ஏ |
| 144881 ஏ | 145002 ஏ |
| 145005 ஏ | 145008 ஏ |
| 145023 ஏ | 145102 ஏ |
| 145109 ஏ | 145112 ஏ |
| 145137 ஏ | 145137 பி |
| 145137 சி | 145323 ஏ |
| 145534 ஏ | 145539 ஏ |
| 145543 ஏ | 145544 ஏ |
| 145545 ஏ | 145546 ஏ |
| 145547 ஏ | 145553 ஏ |
| 144575 ஏ | 145576 ஏ |
| 145584 ஏ | 145609 ஏ |
| 145618 ஏ | 145629 ஏ |
| 145632 ஏ | 145639 ஏ |
| 145640 ஏ | 145642 ஏ |
| 145646 ஏ | 145711 ஏ |
| 14593 ஏ | 147700 ஏ |
| 147716 ஏ | 147717 ஏ |
| 147718 ஏ | 147719 ஏ |
| 147721 ஏ | 147721 பி |
| 147721 சி | 147848 ஏ |
| 147848 பி | |

(ந)

# இலங்கை இனப்பிரச்சினை; இந்திய அரசின் நிலைக்கு ரஷ்யா ஆதரவு

(சென்னை)

இலங்கை இனப்பிரச்சினை குறித்தும் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணன்டஸ் ரஷ்யாவுக்கான தனது ஐந்து நாள் விஜயத்தின் போது ரஷ்ய ஜனாதிபதி புடடினுடன் விவாதித்துள்ளார்.

தனதுவி ஜயத்தைமுடித்துக் கொண்டு நேற்று முன்தினம் புதுடில்லி திரும்பிய அவர் செய்தியாளர்களிடம் பேசினார்.

அவ்வேளை அவர் இலங்கை இனப்பிரச்சினையில் இந்திய அரசு கொண்டுள்ள நிலைப்பாட்டுக்கு ரஷ்ய ஜனாதிபதி தனது ஆதரவைத் தெரிவித்தார் என்றும் கூறினார்.

(சி)

# மேற்கு ஐரோப்பிய நகர்விற்கு இலங்கையர் பலர் துரித முயற்சி

(லண்டன்)

மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழையும் நோக்கில் இலங்கையர் உட்பட பெருமளவு ஆசியநாட்டவர் பல மாதங்களாக பொஸ்னியாவில் தங்கியுள்ளதாக

## பொஸ்னியா பிரதான தரிப்பிடம்

ஐக்கியநாடுகள் சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பொஸ்னியாவை பயண மாற்று தரிப்பிடமாகப் பயன்படுத்திவரும் இவர்கள், சட்டத்திற்கு புறம்பான வகையில் அங்கு தங்கியிருப்பதாகவும், சட்டத்தின் பிடியில் இருந்து தப்பும் வகையில் மறைந்து வாழ்வதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பொஸ்னியாவில் தங்கியிருப்போரில் பெரும்பாலானோர் சீனா, இலங்கை, பங்களாதேஷ் மற்றும் ஈரான் நாட்டைச் சேர்ந்தவர்கள் எனவும் இவர்களது நுழைவைத் தடுக்கும் வகையில் பொஸ்னியப் பொலிஸார் எல்லைப்பாதுகாப்பினை வலுப்படுத்தியிருப்பதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மேற்கு ஐரோப்பிய நாடுகள் உட்பட கனடா, அவுஸ்திரேலியா முதலான நாடுகள் சட்டவிரோதமாக நுழைவோரைத் தடுக்கும் வகையில் இறுக்கமான புதிய சட்டங்களை இயற்றியிருப்பதும் சட்டவிரோதமாக நுழையும் வகையில் பாதுகாப்பற்ற முறையில் பயணம் செய்தபலர் மரணத்தைத் தழுவிக் கொண்டதும் ஏற்கனவே தெரிந்ததே.

(க - உ)

# இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண இந்தியா தயாரித்துள்ள தீர்வுப்பொதி

## ராய்ட்டர் தெரிவிப்பு

(புதுடில்லி)

இலங்கையில் தொடரும் இனமோதல்களை முடிவிற்கு கொண்டுவரும் வகையில் தீர்வுப்பொதி ஒன்றைஇந்தியா தயாரித்திருப்பதாக ராய்ட்டர் செய்திநிறுவனம் தெரிவித்துள்ளது.

எனினும் உத்தேச தீர்வுப் பொதியில் உள்ள விபரங்கள் குறித்ததகவல் எதனையும் ராய்ட்டர் தெரிவிக்கவில்லை.

இதேவேளையில் இலங்கை தமிழர் பிரச்சினைவிடயத்தில் மனிதாபிமான அணுகுமுறை பின்பற்றப்படுவதையே இந்தியா விரும்புகிறது என்று இந்திய துணை வெளிவிவகார அமைச்சர் அஜித்பாஞ்சாதெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடைபெறும் எந்த ஒரு பேச்சுவார்த்தையிலும் பங்கேற்க இந்தியா தயாராயிருக்கிறது என்றார்.

எனினும் ஐக்கிய இலங்கை என்ற அடிப்படையிலேயே இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் இந்தியா பெரிதும் அக்கறை காட்டி வருகின்றது என்றும் மேலும் அவர் தெரிவித்தார். (க-உ)

# பலஸ்தீன சுதந்திர பிரகடனத்திற்கு இஸ்ரேல் கடும் எதிர்ப்பு

(ஜெருசலேம்)

பலஸ்தீன இராட்சியத்தை ஒருதலைப் பட்சமாக பிரகடனப்படுத்தினால், மேற்குக் கரையோரப் பிரதேசங்களை மீண்டும் இணைத்துக்கொள்ளப்போவதா இஸ்ரேல் பிரதமர் எஹிட் பராக் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இஸ்ரேலுடன் இறுதி சமாதானம் ஏற்பட்டாலும் ஏற்படாவிட்டாலும் இந்த ஆண்டு இறுதிக்குள் சுதந்திர பலஸ்தீன நாட்டை பிரகடனம் செய்யும் திட்டமொன்றை பலஸ்தீனத் தலைவர்கள் அங்கீகரித்துள்ளதை அடுத்தே மேற்படி எச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது (உ

## செய்திப்பரல்

★ சீனாவும் அமெரிக்காவும் இந்த வாரத்தில்ஆயுதக் கட்டுப் பாடுசம்பந்தமான பேச்சு வார்த்தையில் ஈடுபட இருக்கின்றன.

★ மணிப்பூரில் 18 தலைமறைவுத் தீவிரவாதிகள் சரணடைந்துள்ளனர்.

★ ஈரோடு தமிழர் எழுச்சி மகாநாட்டில் அமைச்சர் அத்வானி கலந்துகொண்டதைஅ. இ. அ. தி. மு. க. கண்டித்துள்ளது.

★ பிஜியின் புதிய அரசியல் சபையை காமன்வெல்த் அமைப்பு நிராகரித்துள்ளது.

★ பாகிஸ்தானுக்கு ஏவுகணை வழங்கவில்லையென சீனாகூறியுள்ளது,

★ செக்குடியரசு இந்தியா ஐ நா. பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிப்பதை ஆதரிக்கிறது.

## தொண்டர் ஆசிரியர்களின் கவனத்துக்கு

எமது சங்கத்தில் பதிவு செய்து நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றி நியமனம் கிடைக்கப் பெறாத தொண்டராசிரியர்கள் பதிவுச்சான்றிதழும், நேர்முகப் பரீட்சைக் கடிதத்துடனும் 07-07-2000 அன்று அதாவது வெள்ளிக்கிழமை காலை 9-30 மணி[மு.நே] D. M. I. கல்வி நிலையத்திற்கு சமூகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர்.
தொண்டராசிரியர் சங்கம்
யாழ்ப்பாணம்.

(1507)

## இடம்பெயர்ந்த க. பொ. த சாதாரணதர மாணவருக்கு

யா / சந்திரபுரஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தில் தரம் 11இல் கல்விகற்கும் மாணவர்கள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் க. பொ. த. (சா/த) பரீட்சை விண்ணப்பம் தொடர்பாக எதிர்வரும் 18 - 07 - 2000 க்கு முன்பாக யா/ கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் பி. ப. 1 மணி தொடக்கம் 5 மணிவரை தமது பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு அதிபர் கேட்டுக்கொள்கிறார்.

(1506) அதிபர்

## பின்னுறுதித் தீர்வை
## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

குமாரசாமி சுந்தரகுமார்,
35/1, இராசாவின் தோட்டம் றோட்,
யாழ்ப்பாணம்.

வழக்காளி.

வழ: இல:- மணநீக்கம் / 48

எதிர்

சுந்தரகுமார் பெண் தேவமலர்;
முன்னர் சண்முகம் மகள் தேவமலர்,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி,
தற்போது மே.பா.ச. கிருஷ்ணமூர்த்தி
24, வேர்திங் றோட்,
கட்ஜட், விக்ரோறியா 3190,
அவுஸ்ரேலியா.

— எதிராளி

இவ்வழக்கு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில், 2000ம் ஆண்டு ஆனி மாதம் 19ந் திகதி, மேலதிக மாவட்ட நீதிபதி திரு, பா. சுப்பிரமணியம் அவர்கள் முன்னிலையில், வழக்காளியும், வழக்காளி சார்பில் அவரின் பதிவு பெற்ற சட்டத்தரணி திருமதி ச. இளங்கோவனும் சமூகமாயிருக்க, வழக்காளியின் சாட்சியம் ஆவணம் வ 1 என்பனவற்றை ஏற்று வழக்காளியை எதிராளி வன்முறையாகக் கைவிட்டு சென்றுள்ளார் எனத் திருப்திப்பட்டு,

எதிராளியை வன்முறைக் கைவிடலுக்கு குற்றவாளியாகக் கண்டு அதன் அடிப்படையில் வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் 1992-3-23ந் திகதியில் பதிவு செய்யப்பட்ட திருமணத்தை ரத்துச் செய்து, வெற்றும் வெறிதுமாகக் கட்டளையிட்டு பின்னுறுதித் தீர்வை வழங்கப்படுகின்றது.

இப்பின்னுறுதித் தீர்வையின் பிரதி எதிர்வாதிக்கு சேர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் ஆட்சேபனை எதுவும் சமர்ப்பிக்கப்படாவிட்டால் இப்பின்னுறுதித் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படும்.

2000ம் ஆண்டு ஆனி மாதம் 19ந் திகதி
யாழ்ப்பாணம்.

ஒப்பம்
பா. சுப்பிரமணியம்
மேலதிக மாவட்ட நீதிபதி,
மாவட்ட நீதிமன்று,
யாழ்ப்பாணம்.

வரைவு
ஒப்பம்: ச: இளங்கோவன்
வழக்காளியின் சட்டத்தரணி

மேற்கூறப்பட்டவை யாழ். மாவட்ட நீதிமன்ற வழக்கு இல: ம. நீ. 48ல் பின்னுறுதித் தீர்வையின் அத்தாட்சிப்படுத்திய உண்மைப் பிரதியென்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

பதிவாளர்:
மாவட்ட நீதிமன்றம்
யாழ்ப்பாணம்.

[1508)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 16 | 02 | 1949

மறைவு; 18 | 06 | 1999

அமரர் தாமோதரம்பிள்ளை சனாதிராசா
(கரணவாய் கிருஷ்ணா மில்ஸ் உரிமையாளர்)

திதி: ஆனி 22, விக்கிரம ஆண்டு (06.07.2000) இன்று

பாசமிகு கணவனாய், தந்தையாய் எமைக்காத்து
பல சிறப்பும் பெற்று நாம் வாழவழி சமைத்த எந்தாய்!
குடும்ப விளக்கா யிருந்தெமக்கு நல்வழி காட்டிவிட்டு
இமை நொடியில் எமைத் தவிக்கவிட்டு ஏகினீர் அமருலகு.
அன்பில் நிலைத்து அறத்திற் தழைத்து நல்லனசெய்த
எந்தாய்!
இன்மனதுடனே உற்றார் உறவினர்க்கு உதவினீரையா
ஆண்டுகள் சென்றாலும் என்றுமே உங்கள் நினைவகலாது
ஆண்டவனை வேண்டுகிறோம் தங்கள் ஆத்மா சாந்தி பெற!

உங்கள் பிரிவால் துயருறும்,

கோணந்தோட்டம், கரணவாய், குஞ்சர்கடை.

அன்பு மனைவி
பிள்ளைகள்
மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

(1318)

## அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கான தெரிவுப் பரீட்சை 2000

மேற்படிகற்கைநெறிக்கு விண்ணப்பித்துள்ள தகுதியான மாணவர்களின் தெரிவிற்கான பொது அறிவு, பொது உளச் சார்பு பரீட்சைகள் 29. 07. 2000, சனிக்கிழமை காலை 9. 30 மணிக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

தகுதியான மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(இ-631) பதிவாளர்

தன்னெஞ்சறிவது பொய் யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச்சுடும்:
- குறள்

# வலம்புரி

## இயல்பு வாழ்க்கையில் இன்னல்கள்

மக்கள் சேவைக்கு முனைந்துநிற்கும்பொதுப் பணி மன்றங்கள்சொற்களிலும் பார்க்க செயல்களில் அதிக நாட்டம் செலுத்த வேண்டும். தன்னலமற்றசேவைக்கென்று முன் வந்தவர்கள் என்பதை கணமேனும் மறக்கக் கூடாது. அரச பணிகளில் அரச ஊதியம் பெற்றுப்பணிபுரிபவர்களும் மக்கள் சேவையை இம்மியும் மறக்கக் கூடாது. மக்களின் நலனில் அக்கறை காட்டுவார்களேயானால் வீண் வம்புக்கு இழுக்கப் படமாட்டார்கள்.

குற்ற உணர்வின் பின் ஜனிப்பதுகோபமே. சினங்கொள்ளக் கூடாது சிந்தையைத்திருத்திக் கொள்ள வேண்டும். செயலில் நாட்டம் காட்ட வேண்டும். அதிகாரவரம்புகளில் நீதிக்கரங்களைப் படியும் படி செய்ய வேண்டும். கைப்புண்ணுக்கு கண்ணாடி தேடும் நிலையில் வழி தவறி விட்டு நிலை தளம்பக் கூடாது.

மக்கள் அத்தியாவசிய பொருள்களுக்கு அங்கலாய்க்கிறார்கள். நீண்ட கியூவரிசையில்நின்று கால் கடுக்க களைக்கிறார்கள் பொறுப்பானவர்கள் இனியஉளவாக இன்னாத வார்த்தைப் பிரயோகத்தால் மேலும் உள்ளங்களைச் சுட்டெரிக்கிறார்கள். விநியோகத்தில் விவேசமும், விரைவும், சீரும் வேண்டும். எரிபொருள் விநியோகம் சீர்ப்பட்டு வருவதற்குச் சம்பந்தப்பட்ட அனைவரையும் பாராட்ட வேண்டும்.

மக்கள் தாங்கொணாத் துன்பப்படுவது பிரயாணம் செய்வதற்கே. கொழும்புப் பிரயாணத்தில் குழம்பிப் போய் நடைவா நெடுவழியும். நாளெல்லாம் கியூ நிலையும் பார்க்கப் பரிதாபமளிக்கும் பிரயாணத்தில் வகைப்படுத்தி முன்னுரிமை வழங்கப்படுகின்றமை தெரிகிறது ஆனால் இங்கு நிதானமும் கண்டிப்பும் மேலும் தேவைப்படுகிறது

நிர்வாகிகள் ஊட்டச்சத்து ஊசிபோட்டவர்கள் போல் ஒற்றைக் காலில் நின்று தத்தம் துறைகளுக்கு பொலிவும், நீதியும் பெற உழைக்கவேண்டும். இது காலத்தின் தேவை. உயிரைக் கொடுத்து இலக்கைப் பிடிக்க எண்ணலாமென்றால் உணர்வைக் கொடுத்து உண்மை உழைப்பைத் தாருங்கள் என்றே மக்கள் ஏங்குகின்றார்கள்.

-அன்புடன் ஆசிரியர்

# சீநோர் அபிவிருத்தி நிறுவன மீன்பிடி வலைகள் தயாரிப்பு பணி நிலைமைசீரானதும் ஆரம்பிக்கும்

## ஜனாதிபதி உறுதி தெரிவிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் குருநகரில் வடமாகாண புனர் வாழ்வு புனரமைப்பு அதிகார சபையினால் 22இலட்சத்து 48 ஆயிரம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ள சீநோர் அபிவிருத்தி நிறுவனத்தின் மீன் பிடி வலைகள் உற்பத்தி செய்யும் பணிகள் வடக்குக் கிழக்கு மாகாணத்தின் நிலைமை அபிவிருத்தி அடைந்ததும் ஆரம்பிக்க அனுமதிக்கப்படும் என்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க சீநோர் அபிவிருத்திச் சபையின் செயலாளர் அ. இளபோடாசியசுக்குக் கடிதம் மூலம் உறுதியளித்துள்ளார். எனத் தெரிவிக்கப் படுகிறது.

குருநகரிலுள்ளசீநோர் அபிவிருத்தி நிறுவனத்தின் புனரமைப்புப் பணிகள் ஏற்கனவே பூர்த்திசெய்யப்பட்டிருந்த போதிலும் மீன்பிடி வலைகள் உற்பத்தி செய்வதற்கான இரசாயனப் பொருட்கள் இதுவரையும் அனுப்பப்படாமை பற்றியும், இந் நிறுவனத்தை மட்டும் நம்பியிருக்கின்ற 126 தொழிலாளர்களும் வருமானமின்றிப் பாதிக்கப்பட்டிருப்பது குறித்தும் அபிவிருத்திச் சபையின் செயலாளர் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் சுட்டிக்காட்டியிருந்தார் என்பதுகுறிப்பிடத் தக்கது.

இதேவேளை சீநோர் அபிவிருத்தி நிறுவனத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப் படும் பட்சத்தில் சீநோர் தொழிலகத்தில் 1991 ஆம் ஆண்டில் இடை நிறுத்தப் பட்ட தொழிலாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும் என கடற்றொழில் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் உறுதியளித்துள்ளார் எனவும்அறியப்படுகின்றது. இ-77

## வாழைப்பழத்தின் விலை அதிகரிப்பு திருடர் திருவிளையாடலும் ஆரம்பம்

(இணுவில்)

புன்னாலைக் கட்டுவன், ஈவினை, அச்செழு பகுதியில் வாழைத்தோட்டங்களில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

இதேவேளை சுன்னாகம் மருதனார்மடம் சந்தைகளில் வாழைப்பழத்தின் விலை உயர்வடைந்து காணப்பட்டுள்ளது.

ஒருகிலோ கதலி வாழைப் பழம் கடைகளில் 15 ரூபா வரை விற்கப்படுகிறது.

ஏனைய வாழைப்பழங்களின் விலைகளும் கணிசமான அளவு உயர்ந்துள்ளன.

(சி-49)

## தேரினில் வருகின்றான் தேசத்தைக் காக்க

இராகம்: பாகேஸ்ரீ தாளம்: ஆதி

எடுப்பு

பருத்தித்துறையுறை பர்வதபத்தினி பங்காளன்
கருதிய நல்லெண்ணங்கள் கைகூடும் கைதொழுவீர்

தொடுப்பு

தேரினில் வருகின்றான் தேசத்தைக் காத்துக்
கொள்வான்
பாரினில் பாவங்கள் பஞ்சாகப் பறக்கவைப்பான்

முடிப்பு

அடியார்கள் பாடுவர் ஆடுவர் ஆர்வம் கொண்டு
மிடிதீர்க்க உமாபதி முருகன் விநாயகன்
துடிப்புடன் வீதிவர தூயவர் வடம்பிடிப்பர்
கொடி கொடுத்த கோனர் கோடி நன்மை பெறுவர்

செ. வல்லிபுரம்
(கரவெட்டி)

(பருத்தித்துறை புலோலி பசுபதியீஸ்வரர் தேர்த் திருவிழா இன்று)

## கும்பாபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

வல்லை நெடியகாட்டு திருச்சிற்றம்பலப் பிள்ளையாராலய சம்புரோஷன மகா. கும்பாபிஷேகம் இம்மாதம் 7 ஆம். திகதி இடம் பெறவுள்ளது. [சி-21]

## இழப்புக்களை ரஷ்யப்படை மூடிமறைப்பு

(குரொஷ்னி)

செச்சினியாவில் ரஷ்யப் படைகள் சந்தித்து வரும் இழப்புக்களை. ரஷ்ய இராணுவத் தரப்பினர் மறைக்க முயல்கின்றனர் என செச்சினியப் போராளிகள் தரப்பு குற்றம் சாட்டியுள்ளது.

## சாயி அருளமுதம் நம்பிக்கை



தெய்வத்தை மட்டும் எப்போதும் மறக்காதீர்கள். நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள்' யாரையும் விமர்சிக்காதீர்கள். எந்த மதத்தினராயினும் தெய்வத்தின் மேல் உள்ள நம்பிக்கையை அதிகரித்துக் கொள்ளுங்கள். எந்த அளவுக்கு தெய்வநம்பிக்கையை வளர்த்துக் கொள்கிறோமோ; எந்த அளவு தெய்வத்தின்மேல் அன்பைப் பெருக்கிக்கொள்கிறோமோ அப்போது தான் நம் வாழ்க்கை, நம் தேசம் ஏன் பிரபஞ்சம் முழுவதும் கூட நல் வழிப்படும். நன்கு வளரும்.

பாபா

## காலாவதியான பிஸ்கட்வகைகள் கண்டுபிடிப்பு; எச்சரிக்கைவிடப்பட்டது

### சுன்னாகத்தில் சம்பவம்

சுன்னாகம் ப. நோ. கூட்டுறவு சங்கத்தின் இரு கிளைகளில் காலாவதியான பிஸ்கட்வகைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

யாழ். செயலக உணவுக் கட்டுப்பாட்டு பகுதியினர் மேற்கொண்ட திடீர் வேட்டையின் போதே மேற்படி சமூக விரோத நடவடிக்கை அம்பலத்திற்கு வந்துள்ளது.

இது போன்ற நடவடிக்கைகள் இனிமேல் மேற்கொள்ள வேண்டாமென குறிப்பிட்ட கிளை முகாமையாளர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளனர். (க-03)

# "சூரிய காந்தியை" கழுத்தறுத்தவர்கள் இன்று வலம்புரிக்கு கட்சிப் பெயர் சூட்டுகிறார்கள்

## நிதிக்கம்பனியில் வைப்புச் செய்த பணம் எங்கே?

யாழ்ப்பாணத்தில் கடந்த ஏழு மாதங்களாக எத்தனையோ இடைஞ்சல்களையெல்லாம் தாண்டி வலம்புரி வெளிவருவது நீங்கள் அறிந்ததே. யாழ்ப்பாணத்தில் துணிச்சலுடன் வெளி வந்த சூரியகாந்தியை மூடி விடுவதற்காக அதன் பங்காளர்களிடையே பிணக்கை ஏற்படுத்தி அதன் உயிர்த்துடிப்பை நிறுத்தியவர்கள் வலம்புரியின்குரல் வளையை நசுக்க எடுத்த முயற்சிகள் எண்ணிலடங்கா. அந்தவஞ்சகக் கூட்டம்லஞ்சம் வாங்கும்செய்தியாளர்களுக்கு பணத்தை வாரி இறைத்து யாழ்ப்பாணத்தில்"வலம்புரி" வெளிவருவதை இருட்டடிப்புச் செய்தார்கள்.

வலம்புரிக்கெதிராகப் பிரச்சாரம் செய்தார்கள். செய்து கொண்டிருக்கிறார்கள் ஆனால் இப்போது அவர்கள் "பத்திரிகையாளர்களின் பொது மறை" பற்றிப்பேசுகிறார்கள்.

★சூரியகாந்திப்பத்திரிகையை மூறியடித்தபோது இல்லாத பொதுமறை சூரியகாந்தி தடைப்பட்டதை - வலம்புரி வெளி வந்ததைபிரசுரிக்கமுடியாமல்போன பொது மறை.

★ யாழ்ப்பாணத்தில் ஒன்றல்லஇரண்டு பத்திரிகை என்று பி.பி. சியில் பேட்டியளிக்க முடியாத பொதுமறை இன்று எழுந்து பேச வெளிக்கிட்டது விந்தை விசித்திரம்.

"அபஸ்வரமாக ஒலித்துத் தடுமாறிக் கொண்டிருக்கும் தங்கள் ஊது குழலை மட்டும் களத்தில் வைத்துக்கொண்டு தங்கள் நோக்கங்களை எய்தவும்" எனப்பத்திரிகையாளர் உள்ளத்திலிருந்து வெளிவந்த கருத்துக்கு -சபாஷ்.

இலட்சக்கணக்கில் கொழும்பு நிருபர்களில ஒருவருக்கு லஞ்சம் கொடுத்து பேட்டி அளித்தவர்கள் வலம்புரியை கட்சிப் பத்திரிகையென பட்டம் சூட்டுகின்றார்கள் யாழ்ப்பாணத்தில் இயங்கிய நிதிக்கம்பனியில் தம் பெண் பிள்ளைகளின் வாழ்வுக்காக சேமிப்பிலிட்ட பணத்தை வாரிச் சுருட்டி அதனை தமது பத்திரிகைக்கு முதலாக்கி எத்தனையோ கன்னிப் பெண்களின் வாழ்வுக்கே உலை வைத்தவர்கள இன்று பொது மறைபற்றி பேசுகிறார்கள் அதிசயம் அனால் உண்மை,

பணம் உழைப்பதற்காக ஆபாசமான விரசமான கேள்வி பதில்களைத் தாமே தயாரித்து இன்று இளைஞர்கள்விடும் பெண்கள் மீதான சேட்டைக்கும் - கோஷ்டி மோதல்களுக்கும் காரணமாக இருந்தது யார்? யாழ்ப்பாணத்தில் ஒரே ஒரு பத்திரிகை என்று படுபாதகப் பொய் சொன்ன நவமணியின் கட்டுரையை அப்படியே பிரசுரிக்க முடியுமானால், கேள்வி பதில் பற்றி சரிநிகரில் வெளிவந்த கட்டுரையை மறு பிரசுரம் செய்ய முடியாது போனது ஏன்? சந்தர்ப்பம் வரும்போது பச்சோந்தித்தனத்தை வலம்புரிபிரசுரிக்கும்.

கார்மேகக் கண்ணனின் கருணையால் உருவான வலம்புரி கொட்டமடக்கும், தவிர்க்கவேண்டுமாயின்வலம்புரியின் வழிகாட்டலில் உருவான புலமைப்பரிசில் வினா விடைகளை கொப்பிபண்ணி பிரசுரிக்கலாம் ஆறுமாதக் குழந்தையின் பாலைதயை பதினான்கு வருட பேதை

## விதுரபாணம்

பின்பற்றுவது தவறில்லையே! இன்னும் நல்லதை அறிமுகப் படுத்துவோம் பின்பற்றவும்; அதேவேளை முழுநேர ஊரடங்கில் யுத்த சூழ்நிலையில் செய்தித்தணிக்கையில் ஊழியர்களின் இடம் பெயர்வில் 45 நாட்களாக வலம்புரி தனித்து நின்று நம் மக்களுக்கு-திணைக்களங்களுக்கு பல்கலைக்கழகத்திற்கு வழங்கிய சேவையை புகழ்ந்து அனுப்பிய கடிதங்களும், கவிதைகளும் மலைபோல் குவிந்துள்ளன. காலம் வரும் போது அவையும் காண்பிக்கப்படும்.

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்
நூலாந்துறைப் பகுதி

# மீன்பிடிக்கச் சென்றவர் சடலமாக மீட்கப்பட்டார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு முனைக்காடு வாவிப் பகுதியில் மீன் பிடிக்கச் சென்ற ஒருவர் அடுத்தநாள் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு முனைக்காடு மேற்குப் பகுதியில் வசிக்கும் நாகமணி கருணாநிதி (வயது 45) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது; மட்டக்களப்பு முனைக்காட்டு வாவிப் பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற இவர் வீடு திரும்பாததனால் அடுத்தநாள் வாவியை சென்று பார்த்தபோது அங்கு சடலமாகக் காணப்பட்டு மீட்கப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்ட இவரது சடலத்தின் காலிலும், உடம்பிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வாவிக்கு வடக்கே விசேட அதிரடிப்படை முகாம் இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (வ)

# இலங்கை - பாகிஸ்தான் கிரிக்கெட் இலங்கை அணி வெற்றி

(கொழும்பு)

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையே சர்வதேச விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற மும்முனைக் கிரிக்கெட் தொடரின் ஆரம்பப் போட்டியில் இலங்கை அணி 5 விக்கற்றுக்களால் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 45 ஓவர்களில் 8 விக்கற்றுக்களை இழந்து 164 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 37.3 ஓவரில் 5 விக்கற்றுக்களை இழந்து 166 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. அணிக்கு 45 ஓவர்கள் என மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

# குருநகர் உணவுக்களஞ்சியத் திருட்டு சந்தேக நபர்கள் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

குருநகர் அரச களஞ்சியத்தில் இடம்பெற்ற கொள்ளை தொடர்பான வழக்கு விசாரணை யாழ்ப்பாண மேலதிக நீதவான் பி. சுப்பிரமணியம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த உணவுக் களஞ்சியப் பொறுப்பாளரை எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இவ் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட சந்தேக நபர்களை தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (வ-4)

## பிரஜா வுரிமை...

விடுத்துள்ளார்.

இவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இலங்கையின் தேசிய நலன்களை மோசமாகப் பாதிக்கும் விடயங்கள் தொடர்பாக வெளிநாடுகளில் உள்ள முகவர்கள் மூலமாக இலங்கை அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும் உரிமை இ. தொ. காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமானுக்கு இல்லை என்பதை அவருக்குத் தெரிவிக்கவேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## கொழும்பு...

கொழும்பு பிரதமநீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுகின்றனர்.

தற்போது இந்த விசாரணையை கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் நடத்துவதற்கு ஏதுவாக இவ்வழக்குக் கோவைகளை அங்கு அனுப்பி வைக்குமாறு ''அப்பீல்'' நீதிமன்ற ஆலோசனையின் படி கொழும்பு பிரதம நீதிவான் யாழ் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதனையடுத்து யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் இறுதியாக நடந்த செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைக்கோவைகள கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் இடம்பெற்ற செம்மணிப் புதைகுழி வழக்கு விசாரணைக் கோவைகள் மன்னார் மாவட்ட நீதிவான் எம். இளஞ்செழியனிடம் இருப்பதால் அவற்றை அவரிடம் பெற்றுக்கொள்ளுமாறும் யாழ் நீதிமன்றம் கொழும்பு பிரதம நீதிவானுக்கு அறிவித்துள்ளது. (வ-4)

## அரசு...

ஒன்றுக்குப் பதில் அளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

இந்தியா இலங்கைக்கு தார்மீக உதவிகளை மட்டுமே அளித்து வருவதாகவும், இலங்கையின் ஐக்கியம் ஒருமைப்பாடு நிலைநாட்டப்பட வேண்டுமென்பது தான் இந்தியாவின் விருப்பம் என்றும் கூறினார்.

ஜனாதிபதியின் விசேட தூதுவராக சென்றுள்ள பௌத்தசாசன கலாசார அலுவல்கள் அமைச்சர் நேற்றிரவு பிரதமர் வாஜ்பாயையும், வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங்கையும் சந்தித்துள்ளார்.

இதேவேளை இந்தியப் பிரதமர் வாஜ்பாய் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக மத்தியஸ்தம் செய்யும் நோக்கம் இந்தியாவுக்கில்லை என்று தெரிவித்ததாகவும் பி.ரி.ஐ. செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

## யாழ் நகரில்...

வீதிகளில் வைத்து மக்களை கடுமையான சோதனைக்குட்படுத்தினர். அடையாள அட்டைகளும் மற்றும் பொதிகளும் சோதிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிவீதி, ஸ்ரான்லிவீதி கஸ்தூரியார் வீதி ஆகிய வீதிகளின் முக்கிய சந்திகளில் இராணுவத்தினர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இத்திடீர் சோதனை நடவடிக்கையினால் ஆஸ்பத்திரியில் சற்றுநேரம் போக்குவரத்து தடைப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஸ்நிலையத்தில் இருந்து முனியப்பர் கோவிலுக்குப் போகும் மகாத்மாகாந்தி சிலை, பிரதம தபால் கந்தோருக்கு முன்னால் உள்ள வீதி ஆகியன சற்று நேரம் போக்குவரத்து தடைசெய்யப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (வ)

# வன்னிப்பகுதிக்கு மருந்துப்பொருள்

(கொழும்பு)

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு ஒரு லொறி மருந்து வகைகள வவுனியாவில இருந்து எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மருந்து வகைகள் நேற்று முன்தினம் லொறி மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (வ)

# திறந்த போட்டிப் பரீட்சை

கணக்காய்வு பரீட்சகர் தரம் 2 இற்கு நியமனம் செய்வதற்கான மட்டுப்படுத்தப்படாத போட்டிப்பரீட்சை எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் இடம்பெற உள்ளது.

கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இரு பரீட்சை நிலையங்களில் மட்டும் மேற்படி பரீட்சை இடம்பெற உள்ளது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் இறுதித் திகதி இம் மாதம் 27 ஆம் திகதி ஆகும்.

மேலதிக விபரங்கள் 14-6 2000 திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

# கவச வாகனம் கையளிப்பு

யுத்தப் பிரதேசங்களில் பயன்படுத்தவென பொலிஸ் அதிரடிப் படையினருக்கு பத்து கவசவாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இராணுவ தலைமையலுவலகத்தில நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றின் போது இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரிய இக்கவசவாகனங்களைக் கையளித்துள்ளார்.

இந்த கவச வாகனங்களின் பெறுமதி 1 கோடி 80 லட்சம் ரூபாய் என்றும் தெரியவருகிறது. [வ-4)

# ஒரு கிலோ மா 14.95சதம்

யாழ்ப்பாணத்தில் மாவிற்கான புதிய விலைகள் யாழ். செயலக உதவி உணவுக் கட்டுப்பாட்டு பகுதியினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி சகல பல.நோ. கூட்டுறவுச் சங்கங்களும் கிலோ 14ரூபா 15சதத்திற்கு கொள்வனவு செய்து 14ரூபா 95சதத்திற்கு மாவைவிற்பனை செய்யலாம் எனத் தெரிக்கப்பட்டுள்ளது. (க-03)

## இன்று தபால்...

ளது இத் தபால்கள் இன்று விநியோகிக்கப்படவுள்ளதாக தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை வெளியூர்களுக்கான 72 தபால் பொதிகள் யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-3)

## மாயமாக...

பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் 12-30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றித் தெரிவிக்கப்படுவதாவது,

யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ்கல்லூரி மைதான நுழைவாசலில் மாபிள் அடித்து விளையாடிக் கொண்டிருந்த போது அங்கு நின்ற மரத்தின் கிளைகளை ஊசிக்கொண்டு வந்த குண்டே இளைஞனின் தலையைப் பதம்பார்த்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

திருநகரைச் சேர்ந்த மைக்கேல் கஜேந்திரன் நிஷாந்தன் [வயது 16] என்ற இளைஞனே காயமடைந்தவராவார். (வ-12)

# தேர்தல் கடமைக்கு அரச ஊழியர் விபரம் திரட்டப்படுகிறது

எதிர் வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தலை ஒட்டி தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள அரச ஊழியர்களின் விபரங்களைத் தேர்தல் திணைக்களம் திரட்டி வருகிறது.

இது தொடர்பாக தேர்தல் திணைக்களம் அரச அலுவலகங்களுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# மேல் மாகாணத்தில் தமிழர் நலன் காக்கும் பிரிவு மூடப்பட்டது

(கொழும்பு)

மேல்மாகாண முதல் அமைச்சரின் அலுவலகத்தில் இயங்கி வந்த தமிழர் நலன் காக்கும் பிரிவு திடீரென மூடப்பட்டுவிட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பிரிவு மூடப்பட்டதற்கான காரணம் தெரியாமல் தமிழ் மக்கள பெரிதும் விசனமடைந்துள்ளனர்.

மேல் மாகாணத்தில் வாழுகின்ற தமிழ் மக்கள் தமது அலுவல்களை இலகுவாகச் செய்து கொள்வதற்கு வழியாக முதல் அமைச்சர் சுனில் பிரேமச்சந்திரவினால் கடந்த வருடம் மே மாதம் 7 ஆம் திகதி இப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது ஆனால் இப்பிரிவு கடந்த மாதம் 26 ஆம் திகதியுடன் மூடப்பட்டுள்ளது.

இங்கு கடமையாற்றிய ஊழியர்களும் தற்போது வேறு பிரிவுகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர். (வ)

# யுத்தத்தில் உதவிய நாடுகளுக்கு லக்ஷ்மன் ''நன்றி சொல்ல'' செல்வார்

[கொழும்பு]

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவின் விசேட தூதுவராக இந்தியா சென்றுள்ள மகாகலாச்சார அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி தனது மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை முடித்துக் கொண்டு, மற்றும்பல உலக நாடுகளுக்கும்செல்லவுள்ளார்.

இலங்கையுடன் நட்புறவு வைத்துள்ள சீனா, பாகிஸ்தான், இஸ்ரேல், அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு அடுத்த சில தினங்களில் செல்லவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தின் போது உதவி செய்த மேற்படி நாடுகளுக்கு சென்று அவர்களுக்கு நன்றி தெரிவிக்கவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# பாவனைக்குதவாதஊசிகள் இலங்கையில் விற்பனை

பாவனைக்குதவாத மருந்தேற்றும் ஊசிவகைகள் நாடளாவியரீதியாக விற்பனைசெய்வது கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து அவ்வகையான ஊசிகளை விற்பனை செய்வதைத் தடை செய்யுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் மாகாண பிரதிப் பணிப்பாளர்கள் மூலம் சகல உணவு மருந்துப் பரிசோதகர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளார்.

தென்கொரிய நாட்டில் ''யுனிவ் பெடிக்கல் இன்டஸ்ரீஸ்'' ஸ்தாபனத்தினரால் தயாரிக்கப்படும் ஒருமுறை மாத்திரம் பாவிக்கும் மருந்தேற்றும் ஊசிகளும் அதே நாட்டில் ''கோஆ'' சர்வதேச கொம்பனியினால் தயாரிக்கப்படும் தரக்கட்டுப்பாட்டுக்கு அமையாத ஊசிவகைகளுமே தடை செய்யப்பட்ட ஊசிகளாகும். (வ)

# வன்னிக்கு ஒதுக்கப்பட்ட ''எக்ஸ் கதிர்'' இயந்திரம் இராணுவ வைத்தியசாலையில்

(முல்லைத்தீவு)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட ஆஸ்பத்திரிகளுக்கு வடகிழக்குமாகாணசுகாதார அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்ட இயந்திரசாதனங்கள் வவுனியாவில் வைத்து இராணுவ வைத்திய சாலைகளுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலைகளின் தேவைகளுக்கென களஞ்சியத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த எக்ஸ்றே இயந்திரம் கிருமிகளை அழித்துசுத்தம் செய்யும் கருவிகள் ஆகியன ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் வடக்குகிழக்கு ஆளுநரால் அனுராதபுரம் இராணுவ வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## நுகேகொட...

வெடிப்பு சம்பவம் தொடர்பாக விசேட பொலிஸ் குழுக்கள் புலனாய்வு செய்து வருகின்றன.

இக்குண்டு நீதிமன்ற கூரைக்குள் ஒழித்து வைக்கப்பட்டு, கருவியொன்றினால் வெளியிலிருந்து இயக்கப்பட்டதாக குற்றப்புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இக்குண்டு வெடிப்புசம்பவத்தின் போது நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டிய 30 சந்தேக நபர்கள் இரண்டு அறைக்குள் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர் எனவும் இவர்களில் 18பேரே தப்பிச்சென்ற சந்தேக நபர்களென்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-4)

## கரும்புலிகள்...

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் கரும்புலிகளின் உருவப்படங்கள்தாங்கிய ஊர்திகள் பவனி வந்ததாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (ந-7)

## பின் கதவால்...

அடிப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இச்சம்பவத்தை நேரில் கண்ட பொதுமகன் ஒருவர் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அறிவித்துள்ளதைத் தொடர்ந்து அவ் எரிபொருள் விற்பனை நிலையத்தின் மீது வடபிராந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்க விருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல: 15. வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.